## அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தபடுத்து கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முகவராண்மையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 07 ஆம் இலக்க 42 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 118,207,445 க்கான சொத்துக்களை முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருப்பினும் அச்சொத்துக்களை தொடர்ந்து பாவனை செய்யப்படுகின்ற போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 03 ஆம் இலக்கத்திற்கமைவாக இம்மதிப்பீட்டு தவறை மீண்டும் திருத்தப்பட்டு கணக்குகளில் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டடங்கள் தவிர்ந்த சகல சொத்துக்களும் இதுவரையிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவை அனைத்தும் 2019 இறுதி கணக்குகளின் ஊடாக சரி செய்யப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் நூடில்ஸ் இயந்திர சாலையை விற்றதன் மூலம் பெற்ற ரூபா 3,058,500 க்கான பணத்தை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயல்பாட்டின் கீழ் காசு பாய்ச்சலாக காட்டப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மூலதன நிதியத்தின் பெறுவனவுகள் ரூபா 18,006,533 ஆன போதிலும், நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு பாய்ச்சலை கணக்கிடுகையில் மூலதன நிதியத்தின் பெறுவனவு ரூபா 20,029,336 ஆக காட்டப்படாமையினால் நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெற்ற தேறிய காசு பாய்ச்சல் ரூபா 2,022,803 அதிகமாக காட்டப்பட்டுள்ளது. | இப்பணம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பணமாக செலுத்த வேண்டிய பெறுமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான நிதிக்கூற்றை தயாரிக்கும் போது ஒப்பீட்டு தகவல்களின் முன்வைக்கப்பட்டு திருத்தம் செய்யப்படும். | திருத்தப்பட்ட காசு பாய்ச்சலினை காசுப் பாய்ச்சலுக்கான கூற்றில் காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருமானத்தினுள் ரூபா 27,020,326 தேய்மானமாக அதை கணக்கிடுகையில் சம்பந்தப்படுத்த வேண்டாத மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களுக்கான தேய்மானமாக ரூபா 7,963,000 வும் உட்படுத்தப்பட்டிருந்தது. | மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களுக்கான தேய்மானத் தொகையை ஒன்று திரட்டப்பட்ட நிதியத்தில் மீள் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேய்மானத்திற்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 10,290,742 பெறுமதி வாய்ந்த ஆய்வுகூட பொருட்கள் களஞ்சியத்திலிருந்து ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 ஆந் திகதி ஆய்வு கூடத்தில் கையிருப்பின் மொத்தத் தொகையினை கணக்கீட்டு பெறுமதியினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும் பொருட்கள் செலவினமாகக் கருதப்பட்டு கணக்கிலிடப்படுவது இப்போதைக்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு கொள்கையாகும். | ஆய்வு கூடத்தினுள் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாவனை செய்யப்படாத தொகையினை பெறுமானத்தினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 29,110,000 செலவிடப்பட்ட நூடில்ஸ் இயந்திரம் மீளாய்வாண்டில் ரூபா 3,058,500 க்கு விற்பனை செய்யப்பட்டு கிடைத்த பணத்தினை சொத்தினை விற்பனை செய்தமை தொடர்பான இலாப நட்டம் கணக்கிடாமல் நடைமுறை பொறுப்பினுள் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டு நூடில்ஸ் இயந்திரம் விற்பனை செய்யப்பட்ட போதிலும், அது தொடர்பான இலாப நட்டக் கணக்கிடுதல் மற்றும் சொத்தினை அப்புறப்படுத்தலுக்கான காரியம் நடைமுறை வருடம் செய்யப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். | சொத்தினை விற்றமைக்கான இலாப நட்டத்தினை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புபட்ட பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பொது நிதியம் | 131,636,167 | 114,690,472 | 16,945,695 | பொது நிதியம் மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி / தேக்கி வைப்பு வரி கணக்கில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மிகுதி சரியாக | பேரேட்டுக் கணக்கு மிகுதி மற்றும் நிதிக்கூற்று மிகுதி சமமாக இருத்தல் வேண்டும். |
| ஒன்று திரட்டல் நட்டம் | 98,340,039 | 83,101,167 | 15,238,872 | | |
| உழைக்கும் போதே செலுத்தும் வரி / தேக்கி வைப்பு வரி | 303,612 | 117,476 | 186,136 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உள்ளதுடன் பேரேட்டுப் பதிவு பிழைத்து உள்ளது. ஒன்று திரட்டல் நட்டத்தில் நிதிக்கூற்றின் படி மிகுதி சரியாக உள்ளது. |

### 1.5.5 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | தொங்கலாக இருந்த காலஎல்லை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கல் கணக்கு | 201,091 | மூன்று வருடம் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்குகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு அல்லது சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 பொருத்தமற்ற கணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 03 உருப்படிகளுக்கான வருமானத்தின் மொத்த எண்ணிக்கை ரூபா 27,500,000 வாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனில் ரூபா 1,515,632 மாத்திரம் அடையப் பெற்றதினால் ரூபா 25,984,368 விற்கான வருமானத்தினை சேகரிப்பதற்கு நிறுவகத்திற்கு இயலாமற் போயிருந்தது. | வருமான வகை மூன்றினை மதிப்பீடு செய்யப்பட்ட முறையின் படி செயற்படாமையினால் இந்நிலை ஏற்படுவதற்கு காரணியாக இருந்தமை என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். | முறையாக அறிந்து கொண்டதன் பின் சரியான தகவல்களுக் கமைவாக வரவு செலவு மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 முதல் 2016 வரையிலான கால வீச்சினுள் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 993,158 ஆன 02 மிகுதி நிலுவைகள் தற்போது சேவையில் உள்ள | மகாவலி அமைச்சிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை மிகுதி தொடர்பாக விசாரிக்கப் | நீண்ட காலமாக அறவிடப்படாத நிலுவை மிகுதிகளை அறவிடுவதற்கான துரித நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் போன்று இறந்து போனவர்களும் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இம்மிகுதி நிலுவைகளை இனங்கண்டு அவைகளை தீர்த்து வைப்பதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | பட்டிருப்பதுடன் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள நிலுவை மிகுதிகளை தேடிக் கண்டு பிடிப்பது சற்று கடினமான காரியமாக உள்ளதால் ஆராய்ந்து பார்த்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். | எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 முதல் 2017 வரையிலான கால வீச்சினுள் தீர்க்கப்படாது இருக்கும் முழுத்தொகை ரூபா 695,730 க்கான 03 மிகுதியினை செலுத்தி முடிப்பதற்கு அல்லது நிதிப்பிரமாணத்திற்கமைய வருமானத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னால் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். | நீண்டகாலமாக தீர்க்கப்படாது இருக்கும் இந்நிலுவை மிகுதியினை தீர்த்து வைப்பதற்கு அல்லது பொறுப்பில்லா விடின் வருமானத்தில் சேர்த்துக் கொள்வதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி செயல் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் பயன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட நெல் அவிக்கும் அலுமினிய உபகரணங்களை விற்றதன் மூலம் பெற்ற ரூபா 4,318,284 ஆன பெறுநருக்கான சந்தா பணத்தினை பிரதம அமைச்சுக்கு கட்டப்படாது 2009 ஆம் ஆண்டு முதல் பொறுப்பாக வைக்கப்பட்டிருந்தது. | நிதி நிலைப்பாட்டினை அனுசரித்து முன்னால் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். | 09 வருட காலத்தினுள் முடிக்கப்படாத இம்மிகுதியினை கட்டி முடித்திட துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் மொத்த ரூபா 4,929,799 க்கான கழிவு பொருட்கள் விற்பனையின் மூலம் மற்றும் பிணை முறி மீறல் தொடர்பாக பெற்ற பணத்தினை திரண்ட நிதிக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி நிலைப்பாட்டினை அனுசரித்து முன்னால் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். | இப்பணத்தினை திரண்ட நிதியத்தினைக்கு அனுப்பி வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மொத்தம் ரூபா 99,996 க்கான 02 வருடம் முதல் 15 வருட வரையிலான காலவீச்சினுள் செலுத்தப்பட்டுள்ள போக்குவரத்து செலவுக்கான முற்பண இணக்க கட்டுநிதி மற்றும் தலைமைக் காரியாலய இணக்க கட்டுநிதியின் மிகுதியினை தீர்த்து கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்க கட்டு நிதி கணக்கின் மிகுதிகளை சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நிலுவை மிகுதிகளை இலகுவில் தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாக இருப்பதால் அவைகளை தேடிக் கண்டுபிடித்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். | போதியளவு காலம் கடந்துள்ளமையினால் முற்பணத்தினை அறவிடப்படுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமணம் இலக்கம் 1645 | கடமைக்கான வாகனம் பாவனை செய்யும் உத்தியோகத்தர்கள் வாகனம் செலுத்தலுக்கான குறிப்பட்டையில் கையொப்பம் இடப்பட வேண்டியிருந்த போதிலும், இரு வாகனங்கள் பாவனை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களால் 28 சந்தர்ப்பங்களில் அவ்வாறு கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமையை சீர் செய்வதற்காக சாரதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றனர். | நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக் கமைவாக செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 2015/01 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | சம்பந்தப்பட்ட காரியம் முடிவுற்று 10 நாட்களுக்குள் முற்பணத்தினை மீள் செலுத்த வேண்டியுள்ள போதிலும், 17 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட முற்பணம் 01 மாதம் முதல் 6 ½ மாதம் வரையிலான வீச்சினுள் தாமதப்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி காரியங்களில் அதிக அளவிலான காரியங்கள் தொடர்பாக முற்பணம் கொடுக்கப்படுவது உண்டு. அது போன்றே கல்விசார் மற்றும் பரிசோதனை பிரிவில் உள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் முற்பணம் பெறப்படுவதுடன் அவர்கள் பல கருமங்களில் ஈடுபடும் போது பல முற்பணங்களை பெற்றுக் கொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் தாமதித்து மீள் செலுத்தப்பட்டதும் உண்டு. இந்நிலையை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | கொடுக்கப் பெற்ற முற்பணத்தினை தாமதமின்றி அறவிடுவதற்கான முறைமையொன்றினை கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை பெறுபேறு ரூபா 15,238,872 வாக இருந்ததுடன் அதற்கு அமைவாக சென்ற வருடம் ரூபா 8,193,073 ஆக இருந்தது. அதன்படி நிதி பெறுபேற்றில் ரூபா 7,045,799 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. சென்ற வருடத்தை விட மீளாய்வு வருடத்தில் வருமானம் அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் நிரம்பல் மற்றும் சேவைகளினதும் பலதரப்பட்ட செலவினங்களும் அதிகரித்தல் இப்பின்னடைவுக்கு முக்கிய காரணிகளாக இருந்தன.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

சென்ற ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்களின் விகிதாசாரம் 1:1.22 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 1:0.96 ஆன பின்னடைவு காணப்பட்டது. சென்ற வருடத்திற்கு நேரொத்ததாக செலுத்தப்பட ணேடிய செலவினங்கள் 26 சதவீதமாக அதிகரித்தமை இப்பின்னடைவுக்கு முக்கிய தாக்கம் செலுத்தியுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி 01/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்று நிருபத்திற்கமைய உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்கு உரிமை இல்லாத நிறைவேற்று பதவியற்ற பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவருக்கு நிறுவனத்தில் வருமான மேம்பாட்டு காரியங்களுக்காக மாதமொன்றிற்கு 150 லீட்டர் எரிபொருள் வாகனம் ஒன்றினை ஒதுக்கிக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. ஆயினும், வருமான மேம்பாட்டு செயல்பாட்டினையோ அல்லது வருமான இலக்கினையோ பெற்றுத்தராததுடன் அவருக்காக வாகன பராமரிப்பு எரிபொருள் மற்றும் சாரதி சம்பளக் கொடுப்பனவுமாக 2017 ஏப்ரல் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 1,540,869 நிறுவன நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | 2017 யூலை மாதம் 14 ஆந் திகதி நடாத்தப்பட்ட 138 ஆவது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட வருமான மேம்பாட்டுக் குழுவின் தலைவராக பிரியந்த ஜயதிஸ்ஸ அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரின் வேண்டுகோளின் படி வருமான மேம்பாட்டு செயற்பாட்டினை மேற்பார்வை செய்வதற்காக 140 ஆவது பணிப்பாளர் சபையினால் 6 மாத காலத்திற்கும் 143 ஆவது பணிப்பாளர் சபையினால் முன்னைய வருடத்தின் வாகன மேம்பாட்டினை கவனத்திற் கொண்டு மீண்டும் வாகனத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. | ஒரு கருமத்தினை ஒப்படைக்கப்பட்டு அக்கடமையினை செய்வதற்கு மாத்திரம் வாகனமொன்றினை ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டியதுடன் அதற்கான அங்கீகாரத்தினை அமைச்சு செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் மூத்த பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவர் கலாநிதிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக 2006 யூலை 23 முதல் 2009 யூலை 29 வரை ரூபா 1,998,980 விற்கான பிணை ஒப்பந்தத்தின் கீழ் சம்பளத்துடனான கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டதுடன் கைச்சாத்திடப்பட்ட பிணை ஒப்பந்தத்தின் படி 2009 யூன் 29 முதல் 2019 யூன் 29 வரை மீண்டும் | மேலதிக பணிப்பாளர் (நிர்வாக மற்றும் நிதி) தனிப்பட்ட முறையில் பொது வியாபார திணைக்களத்திற்குச் சென்று இது சம்பந்தமாக தேடிப்பார்த்துள்ளதுடன் இவ்விவகாரத்தினை சட்ட பிரிவின் கவனத்திற்கு கொண்டு சென்று இருப்பதாகவும் மேற்கொண்டு தகவல்கள் கிடைத்ததும் நிறுவனத்தினை அறிவுறுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பிணை ஒப்பந்தத்தினை மீறப்பட்டமையினால் இழப்பினை அறவிடப் படுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திலேயே சேவையாற்ற வேண்டிய போதிலும், கலாநிதிப் பட்டம் படிப்பினை மேற்கொண்டு முடித்ததன் பின் 2009 யூன் 29 ஆந் திகதியன்று கடமையை மேற்கொண்டிருந்த போதிலும், எதிர்வரும் 10 வருடம் சேவையாற்றாது 2016 சனவரி 07 ஆந் திகதியன்று சேவையை கைவிட்டு விலகிபோய் விட்டார். ஆயினும், மேற்படி பிணை ஒப்பந்தத்தினை மீறியமைக்கான நிறுவனத்திற்கேற்பட்ட இழப்பினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | பின் அறுவடைக்கான தொழில்நுட்ப நிறுவனத்தினுள் ஆரம்பம் முதற்கொண்டு மீளாய்வாண்டு இறுதிவரை எந்தவொரு சேவைக்குழுவுக்கும் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை பிரகாரம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை நடாத்தப்படாததுடன் நன்னடத்தை கால எல்லையினுள் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட சேவையினை பூர்த்தி செய்ததன் பின் சேவையை நிரந்திரப்படுத்தல், பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் புதுத் தலைவரினது தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் எமது நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க சிற்றூழியர் இருப்பதனால் அரச பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு நிறுவனத்தின் ஊழியர்களை உள்வாங்கிக் கொள்வதற்கான சாத்தியக்கூற்றை பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இது சம்பந்தமாக பரீட்சை நடாத்தப்படும் இடங்களில் விசாரணை செய்யப்பட்டிருப்பதுடன் அங்கிருந்து பதில் கிடைத்ததும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இது சம்பந்தமாக அமைச்சினது கணக்காய்வு கலந்துரையாடப் பட்டிருப்பதனால் வினைத்திறன் தடைகாண் பரீட்சையினை காலதாமதமின்றி நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிறுவனத்தின் கணக்குகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக ரூபா 240,000 செலவில் நிறுவப்பட்டுள்ள கணக்கியல் மென்பொருளினை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளீர்த்தல், வங்கி இணைக்கக் கூற்றினை தயாரித்தல் போன்ற விடயங்களுக்காக அதனை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிகழ்காலத்தில் வங்கி இணைக்கக்கூற்று தயாரித்தல் போன்ற விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | கணக்கியல் மென்பொருளினை உச்ச கட்ட நிலையில் பாவனை செய்யப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கையில் விவசாய செய்கையின் நிரம்பல் மற்றும் வருமான முகாமைத்துவ திட்டத்தின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினை மூன்று முறை திருத்தப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் முதல் செயற்பாடான இலங்கையில் விவசாய உற்பத்திகள் தொடர்பாக காணப்படும் நிரம்பல் அமைப்பினை இனங்கண்டு கொள்வதற்காக ஆரம்ப பரிசோதனை நடாத்துதல் மற்றும் விவசாய உற்பத்தியின் செயற்பாட்டு தொடரின் உண்மையான பின் விளைச்சல் ஊடாக ஏற்படும் இழப்பினை இனங்காணும் செயல்பாட்டினை இறுதியாக திருத்தப்பட்ட செயற்பாட்டு திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டிருக்க வில்லை. | 2017 ஆம் ஆண்டில் முதலாவது செயல்பாட்டினை தொடர்பான கமநல சேவை திணைக்கள உத்தியோகத்தர் ஊடாக விவசாய உற்பத்தி தரவுகள் பெற்றுக்கொள்ளும் வேலைகள் முடிவடையாத போதிலும் அது சம்பந்தமான வேலைகள் 2018 ஆம் ஆண்டு முதலாவது செயற்பாட்டின் கீழ் செய்யப்பட்டது. | வருடாந்த செயல்பாடுகள் திட்டமிடும் போது அக்கருமங்கள் குறிக்கோளுக்கு சார்புள்ளதாக செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விவசாயி முதற்கொண்டு சில்லறை வியாபார வரை மரக்கறி மற்றும் பழவகை கொண்டு செல்லும் வாகனங்களை பகுப்பாய்விற்காக ரூபா 1,290,000 கிரயப்படுத்தி 100 GPS Trackers Units , 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2019 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் அவ்வுபகரணங்களில் 98 களஞ்சியசாலையிலேயே தேங்கிக் கிடந்தவுடன் மிகுதி 2 GPS Trackers வேறு பரீட்சார்த்த திட்டங்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அவ்வுகரணங்களை பொருத்தப்படாது பொருத்தப்படுவதற்கான கட்டணமாக ரூபா 600,000 செலுத்தப்பட்டிருந்தது. | GPS Trackers செயல்படுத்துவதற்காக அவ்வியந்திரங்களுக்கு Data Sim பொருத்தப்படல் வேண்டும் எனவும், அவைகளை கைதொலைபேசி நிறுவனத்திலிருந்து தனியாக பெற்றுக்கொள்ள வேண்டியமையினால் இயந்திரத்தினை செயல்படுத்துவதற்காக Data Sim கொள்வனவுக்கு ஆவண செய்யப்பட்டதுடன் 2018 ஒக்தோபர் மாதம் கொள்வனவுக்கான கோரிக்கை விடுத்த போதிலும், வருட இறுதி வரை நிரம்பல் செய்யப்படவில்லை. தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | முறையான திட்டம் வகுத்தல் மற்றும் தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 4,680,000 செலவிடப்பட்டு 100 Temperature Data Loggers மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதில் 70 கணக்காய்வு நாள்வரையிலும் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்ததுடன் களஞ்சியசாலையிலிருந்து வெளிக்கொடுக்கப்பட்டிருந்த Data Loggers 30 உம் நிறுவனத்தின் வேறு பரிசோதனை திட்டங்களுக்காகும். இதுபோன்ற மிக நுணுக்க மின்னனு உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக இட்டு வைப்பதனால் அதன் இயக்க செயல்பாடுகளுக்கு சேதம் விளையும் ஆபத்து இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | விவசாயி முதற்கொண்டு சில்லறை வியாபாரி வரை வாகனங்களில் விவசாய விளைச்சல்களை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் உஷ்ணத்தின் ஏற்ற இறக்கத்தினை அறிந்து கொள்வதற்காக இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதும், தரவுகளை பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க காலம் தாமதம் ஏற்பட்டது. | முறையான திட்டம் வகுத்தல் மற்றும் தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பரிசோதனை வழிகாட்டலின் படி சகல பரிசோதனை திட்டங்களின் முன்னேற்றத்தினை இரண்டு மாதங்களுக்கொரு முறை பரிசோதனை குழுவிற்கு அறிவிக்க வேண்டி இருந்த போதிலும், விவசாய விளைச்சலின் நிரம்பல் மற்றும் பெறுமதியினை முகாமைத்தவ திட்டத்தினால் இறுதி பரிசோதனைக்கான அறிக்கையினை 2018 திசெம்பர் வெளியாக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் நடைமுறையில் இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு செயல்பட்டு வரும் பரிசோதனையினுள் இத்திட்டம் உட்படுத்தப்படாததுடன் 2019 வரவு செலவு திட்டத்தினுள் இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டின் தேவை இருக்கவில்லை. அதன்படி ரூபா 7,292,832 செலவு செய்து நடாத்தப்பட்ட திட்டம் வீணடிக்கப்பட்ட செலவினமாக அவதானிக்கப்பட்டது. | விவசாயி முதற்கொண்டு சில்லறை வியாபாரி வரையிலான விவசாய விளைச்சலினை வாகனங்களில் கொண்டு செல்லும் போது ஏற்படும் உஷ்ணத்தினை ஏற்ற இறக்கத்தினை அறிந்து கொள்வதற்காக இவ்வுபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. ஆயினும், தரவுகளை பெற்றுக் கொள்வதில் இதை அறிந்து கொள்வதற்கான தாமதம் ஏற்பட்டது. | சம்பந்தப்பட்ட திட்டத்தின் அறிக்கையினை முறையாக பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | பழங்களை பழுக்கச் செய்வற்கான காபன் சார் முறையினை அறிமுகப்படுத்தப்படுவதுடன் பழங்களை பழுக்கச் செய்யும் முறையினை விளம்பரப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடு இறுதி ஆண்டின் செயற்பாட்டினுள் காட்டப்பட்டிருந்த போதும், திட்டத்தினை ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலேயே அதாவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயே ரூபா 9,572,717 செலவிடப்பட்டு அது சம்பந்தமான சகல உபகரணங்களும் நிறுவனத்தின் வேறு திட்டங்களுக்காக பாவனை செய்யப்பட்டிருந்தன. அதே | இத்திட்டத்தின் முக்கிய ஆராய்ச்சியாளர் சேவையிலிருந்து விலகியதுடன் அப்போது இவ்வாராய்ச்சி முடிவடைந்திருக்கவில்லை. இவ்வாராய்ச்சிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முக்கிய உபகரணம் GAS Chromate Graph (GC) இயந்திரம் ஆகும். இப்பரிசோதனையின் போது வாயு பகுப்பாய்வினை சகலதும் இவ்வுபகரணத்தின் மூலம் ஆகும். அதற்கு மேலாக பின் விளைச்சலின் சிறப்பினை பகுப்பாய்வு செய்யும் சகல பரிசோதனைகளுக்கும் இந்த உபகரணம் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போன்று இத்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த Desktop 10, Laptop 5 மற்றும் Tablets 5 உம் இத்திட்டத்திற்காக ஈடுபடுத்தாது நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் தேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | | |
| (ஊ) | அதேபோன்று மேற்படி திட்டத்தின் பரிசோதனை வழிகாட்டலின் பிரகாரம் திட்டங்களின் முன்னேற்றத்தினை இரு மாதங்களுக்கொரு முறை அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், இத்திட்டத்தின் 2017 திசெம்பர் மாதத்திற்கு பின் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் முன்னேற்ற அறிக்கை முன்வைக்கப்படவில்லை. இப்பரிசோதனையின் கண்டுபிடித்தலுக்கான பேடன்ட் உரிமையினை பெற்றுக் கொள்வது மற்றும் பரிசோதனையின் பெறுபேறுகள் வணிக மட்டத்தில் பிரச்சாரம் செய்வதை குறிக்கோளாகக் கொண்டு ரூபா 9,572,717 இந்த பரிசோதனைக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், நிகழ்காலத்தில் அதன் செயற்பாடு மற்றும் பௌதீக முன்னேற்றம் கீழ் மட்டத்தில் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | பரிசோதனை பிரேரணையில் காட்டப்பட்ட விதத்தில் இறுதி உற்பத்திக்கான Patent பெற்றுக் கொள்வது செய்யப்பட வேண்டியது ஆன போதிலும் பரிசோதனை பெறுபேறுகளின் மீது இறுதி உற்பத்தியின் செயற்பாட்டினை வணிக ரீதியாக பிரபல்யப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை என அவதானிக்கப்பட்டது. பரிசோதனையின் சகல ஆய்வுகூட செயற்பாடுகளும் முடிக்கப்பட்டுள்ளன. | பரிசோதனை வழிகாட்டலின் படி திட்டங்களின் முன்னேற்றத்தினை உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டிலிருந்து தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் 07 வகையிலான உணவுகளில் 04 உலோக வகைகள் கலந்திருக்கின்றதா என்பதனை பரிசீலிப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட | இறக்குமதி செய்யப்பட்ட உணவுகளிலும் உள்நாட்டு உணவுகளிலும் கலந்துள்ள உலோகத் தன்மையினை பரீட்சித்து அது சம்பந்தமாக அறியப்பட்டு அதன் பெறுபேறுகள் ஊடாக விவசாய ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இத்திட்டத்தினை 2017/2018 இரு | அறிக்கையின் முடிவுகள் மற்றும் யோசனைகளின் படி உணவுகளின் உலோகத்தன்மை கலந்துள்ளமை உறுதிப்படுத்தப் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டு ரூபா 1,956,120 செலவிடப்பட்டு 500 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டிருந்தன. அப்பரீட்சைக்காக உட்படுத்தப்பட்ட திட்ட அறிக்கையின் படி சில உணவு வகைகளில் கூடிய பாதுகாப்பு மட்டத்தினை மீறப்பட்டு Cadmium, Arsenic and Leaf போன்ற உலோகப் பொருட்கள் கலந்துள்ளதாக செய்யப்பட்ட பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டது. இருந்த போதிலும், அவ்வறிக்கையின் தீர்வுகள் யோசனைகளின் படி உலோகப் பொருட்கள் கலந்த உணவு சம்பந்தமாக மேற்கொண்ட பரிசோதனை நிறுவனத்தினால் செய்யப்பட்டு அதோடு சம்பந்தப்பட்ட அதற்கு பொறுப்பான சகல தரப்பினருக்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக தகவல் பெற்றுத் தரப்படவில்லை. அதன் காரணமாக அவ்வாராய்வுக்காக செலவிடப்பட்ட பணம் வீணடித்தல் என கணக்காய்வால் அவதானிக்கப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்கான செலவீனமாக ரூபா 5,350,000 பணத்தினை விவசாய அமைச்சிலிருந்து மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடங்களுக்காக திட்டமிடப்பட்ட போதிலும், 2017 வருடத்தில் பரீட்சிக்கப்பட்ட 500 மாதிரிகளின் பெறுபேறுகளை அவதானித்து இத்திட்டத்தினை முற்கொண்டு செல்வது மிக உசிதமென 2018 வருடத்திற்கான திட்ட ஆராய்வின் போது செய்யப்பட்ட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டு ஒதுக்கீடு கிடைக்காததன் காரணமாக அத்திட்டத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன. | பட்டிருப்பதனால் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினருக்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அறிவுறுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | நிறுவனத்திற்கு சொந்தமான ஆய்வுகூடத்தினை சர்வதேச நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வுகூடமாக நவீனமயப்படுத்தப் படுவதற்காக 2015 ஆம் ஆண்டினுள் ரூபா 61.6 மில்லியன் செலவழிக்கப்பட்டு | அத்தியாவசியமான நவீன உபகரணங்கள் சிலவற்றை கொள்வனவு செய்தல் மற்றும் ஆய்வுகூடத்தினை நவீன மயப்படுத்துதல் 2015 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனை சம்பந்தப்பட்ட பரிசோதனைப் பத்திரம் உள்நாட்டிலும் Elesevier | ஆய்வுகூடத்தினை சர்வதேச தரத்திற்கமைவாக பரிசோதனைகள் செய்வதற்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ள கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஆய்வு கூடத்தினை நவீனமயமாக்கப்பட்டிருந்த போதிலும், அவ்ஆய்வு கூடத்தில் சர்வதேச தரத்திலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றிதழ் (Accreditation) பெற்றுக் கொள்ளப்படாமையினால் இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வது இயலாதுள்ளதுடன் மீளாய்வாண்டில் (2018/2019) இருமுறை இயந்திரங்களை பொருத்துவதற்காக ரூபா 1,236,664 ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாமையினால் இயந்திரங்களின் இயக்கப்பாட்டிற்கும் ஆயுட்காலத்திற்கும் இடர் ஏற்படக்கூடுமென அவதானிக்கப்பட்டுள்ளது. | போன்ற உலக அங்கீகாரம் பெற்ற சர்வதேச சஞ்சிகை ஆகியவைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உணவு வகைகளுக்கு அந்நாடுகளின் தேவைக்கேற்ப Accreditation சான்றிதழ் உள்ள ஆய்வுகூடங்களில் மாத்திரம் மாதிரிகள் பரீட்சிக்கப்பட வேண்டும். அதன்படி 2020 இறுதியில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. | சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | நிறுவனத்தினை தாபிப்பதற்கான குறிக்கோள்களுள் விவசாய விளைச்சலின் போது பின்னர் ஏற்படும் சேதத்தினை குறைத்துக் கொள்வது நிறுவனத்தின் குறிக்கோளாக இருந்ததுடன் அதற்காக 2009 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஆரம்ப ஆய்வுக்கு அமைய நீண்டகாலம் வைத்துக் கொள்ள முடியாத விவசாய விளைச்சலின் பின்னர் ஏற்படும் சேத வீதம் 30 க்கும் 40 க்கும் இடைப்பட்டு இருந்ததாக இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு முடியும் போது, கிட்டத்தட்ட 09 | 2013 ஆம் ஆண்டு போஞ்சிக்காய் மற்றும் வாழைக்காய் ஆகிய விளைச்சலின் பின் விளைச்சல் சேதத்தினை முடிவு செய்வதற்கு ஆய்வொன்று மேற்கொண்டு அத்தரவுகளை வெளியிடப்பட்டிருந்ததுடன் விவசாயம் சார் பொருளாதார பெறுமதியான பிரதான விளைச்சல்களின் பின் விளைச்சலின் சேதத்தினை முடிவு செய்வதற்காக தள ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டு இப்போது அதன் வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. | பின் விளைச்சலின் சேதத்தினை குறைத்துக் கொண்டுள்ள அளவினை எவ்வளவு என இனங்கண்டு கொள்ளக் கூடியதான முறையில் ஆவணங்கள் வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் கழிந்திருந்தும் இதுவரை பின் விளைச்சல் சேதத்தினை குறைத்துக் கொண்டுள்ள அளவு வீதப்படி எவ்வளவு என்பதனை இனங்கண்டு கொள்வதற்கான தரவு முறைமையொன்று நிறுவனத்துடன் இல்லாது உள்ளது. | | |
| (ஓ) | 2015 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டு வருடத்திற்கு ரூபா 275,000 பராமரிப்பு செலவு செய்யப்பட்டு முழு அளவிலான குளிரூட்டப்பட்ட நிலையில் நடாத்தப்படும் ரூபா 15,216,575 பெறுமதி வாய்ந்த Gas Chromato Graph Mass Spectrometer (CGMS) இயந்திரம் இதுவரை நிறுவனத்தின் எவ்வித காரியத்திற்கும் பாவனை செய்யப்படாது வீணடிக்கப்பட்டுள்ளது. | இவ் இயந்திரத்தினை எதிர் வருடம் பரிசோதனை விடயங்களுக்காக பாவனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இந்த இயந்திரத்தினை பிரயோசனப் படுத்துவதற்கு பயனுள்ள நிறுவனமொன்றிற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | நிறுவனத்தினால் 2009 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்ட பரிசோதனைகளின் பெறுபேறுகளாக புதுக்கண்டுபிடிப்புக்கள் 08 க்களுக்கான பேடன்ட் உரிமம் பத்திரம் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அக்கண்டுபிடிப்புக்களின் ஊடாக விளைச்சல் களத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தினைக்கு ஏற்படுத்தியுள்ள பங்களிப்பு என்ன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல் எதுவும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாமையினால் பரிசோதனைகளின் பெறுபேறுகள் பேட்டண்ட் உரிமப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. | பரிசோதனைகளை சமூகமயப்படுத்துதல் எனும் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் ஊடாக முடிக்கப்பெற்ற பரிசோதனைகளை ஒப்பீடு செய்யப்பட்டு களத்திற்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய பரிசோதனைகளை தொழில்நுட்ப மற்றும் விளம்பர பிரிவினால் விரிவாக்கம் செய்யப்படும். அதுபோன்றே தெரிவு செய்யப்பட்ட சில தொழில்நுட்பங்களை புதினப் பத்திர விளம்பரத்தின் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டு அது பற்றிய அக்கறையுள்ளவர்களுக்கான செயலமர்வு ஒன்றினை நடாத்தி அத்தொழில்நுட்பங்களினை களத்தினைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நேரிட்டது. இதன் கீழ் 03 தொழில்நுட்பங்களை சமூகப்பயப்படுத்தலுக்கு வாய்ப்பு கிடைத்தது. | நிறுவனத்தினது முக்கிய குறிக்கோளினை சாத்தியப்படுத்திக் கொள்வதற்காக நிறுவனத்தினால் கிடைக்கும் பங்களிப்பு போதுமானதாக இல்லாமையினால் இவ்விடயம் சம்பந்தமாக உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 யூலை 18 ஆந் திகதிய இலக்கம் 03/2018 உடைய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளப்படாது பணிக்குழாமினை சேர்த்துக் கொள்ளப்படாததுடன் அவ்வாலோசனைப் படி செயல்படாமல் செய்யப்படும் ஆட்சேர்ப்புக்கான பொறுப்பினை நிறுவன தலைமையதிகாரி மற்றும் நிதிப் பிரிவு தலைமையதிகாரி பொறுப்பேற்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 10 சமயாசமய ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2018 செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் 31 வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 914,428 கொடுக்கப்பட்டிருந்தது. | நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு மேலதிக பணிப்பாளர் (பரிசோதனை மற்றும் தொழில்நுட்ப விளம்பரம்) பிரதம பரிசோதனை அதிகாரி ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளன. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) நிறுவனத்தில் பணிப்பாளர், பதில் பணிப்பாளர் (பரிசோதனை மற்றும் அபிவிருத்தி) சிரேஷ்ட பரிசோதனை உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் மீளாய்வாண்டு ஆரம்பம் முதல் நிரப்பப்படாது இருந்ததுடன் கணக்காய்வு தினமாகும் போது மேற்படி உத்தியோகத்தர் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர் 07 பேர்களினது வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்தன. | மேலும், பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் முக்கிய பதவிகளுக்கான பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் (பரிசோதனை மற்றும் தொழில்நுட்ப விளம்பர) பிரதம பரிசோதனை உத்தியோகத்தர், பிரதம திட்ட உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. ஏனைய பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் முற்படாமையினால் மீண்டும் பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டிருப்பதுடன் சனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். | தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாட்சி**

**4.1 நிதிக்கூற்றினை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் அதிபதியிடம் 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதியாகும் போது தயாரித்து முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான 2019 யூலை 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட 149 ஆவது பணிப்பாளர் சபை முன் சமர்ப்பிக்கப்பட்ட போதும், அதன் ஆலோசனை மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பரிந்துரையுடன் 2019 யூலை 29 ஆந் திகதி நடாத்தப்பட்ட 151 ஆவது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பரிந்துரைகளின் அங்கீகாரத்தினை 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட 151 ஆவது பணிப்பாளர் சபையினால் கிடைத்ததும் அன்றே கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |